# PROGRESSIVE WAGE MODEL

## Model Gaji Progresif Bagi Industri Runcit

## சில்லறை விற்பனைத் துறைக்கான படிப்படியான சம்பள உயர்வு முறை




## Empat Tangga

# Model Gaji Progresif

## படிப்படியான சம்பள உயர்வு முறையின் நான்கு ஏணிகள்

Model Gaji Progresif (PWM) menyediakan laluan kemajuan kerjaya yang jelas, membolehkan para pekerja kita meraih **Gaji Lebih Baik** dengan **Prospek Pekerjaan yang Lebih Baik** sedang mereka menjadi **Lebih Berkemahiran** dan **Lebih Produktif**.

PWM ini dikenakan kepada semua pekerja pemastautin, iaitu **Warganegara Singapura dan Penduduk Tetap** dalam sektor ini. Pekerja sambilan hendaklah dibayar mengikut gaji PWM pro-rata.




படிப்படியான சம்பள உயர்வு முறை (PWM), தெளிவான முன்னேற்றப் பாதையை வகுத்துத் தருகிறது. நமது ஊழியர்கள் **மேம்பட்ட திறன் பெற்று**, **உற்பத்தித்திறனை வளர்த்துக் கொள்ளும்போது**, **மேம்பட்ட வேலை வாய்ப்புகளோடு மேம்பட்ட சம்பளம் பெற** இப்பாதை துணை புரிகிறது.

சிங்கப்பூர்வாழ் ஊழியர்கள், அதாவது இந்தத் துறையில் பணிபுரியும் **சிங்கப்பூரர்கள் / நிரந்தரவாசிகள்** அனைவருக்கும் PWM பொருந்தும். பகுதிநேர ஊழியர்களுக்கு விகிதப்படியான PWM சம்பளம் கிடைக்கும்.

*Nota: Bagi firma yang menggajikan pekerja asing, majikan digalak mengamalkan prinsip utama gaji progresif dalam struktur gaji mereka.*

குறிப்பு: *வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்குச் சேர்க்கும் நிறுவனங்கள், படிப்படியான சம்பள உயர்வு முறையின் முக்கிய கொள்கைகளைத் தங்களது சம்பள முறையில் உள்ளடக்க ஊக்குவிக்கப்படுகின்றன.*

Untuk maklumat lanjut mengenai PWM, sila hubungi Pusat NTUC U Care:
PWM பற்றி மேல்விவரம் அறிய, என்டியுசி யு கேர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்:


**NTUC U Care Centre**
1800 CALL PWM (1800 2255 796) (Mon – Fri: 9am – 6pm)
pwm@ntuc.sg
https://www.ntuc.org.sg/pwm   /pwmsecretariat


An ntuc Initiative


© 2025 NTUC All Rights Reserved
All information in this publication is accurate as of September 2025


Pada Oktober 2020, Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) telah dibentuk untuk meninjau cara-cara bagi meningkatkan lagi gaji dan kesejahteraan para pekerja bergaji rendah. Ini termasuk peluasan Model Gaji Progresif (PWM) ke lebih banyak sektor serta memastikan pertumbuhan gaji pekerja bergaji rendah terus melebihi pertumbuhan gaji median.

Kumpulan Kerja Tiga Pihak bagi Industri Runcit (TCR), yang diwakili oleh persatuan-persatuan industri, majikan, kesatuan sekerja dan agensi pemerintah, telah mengeluarkan saranan pada 15 Ogos 2022 yang telah diterima oleh Pemerintah.

PWM Runcit, yang berkuat kuasa mulai 1 September 2022, merangkumi pekerja runcit pemastautin (Warganegara Singapura/ Penduduk Tetap) sepenuh masa dan sambilan yang bekerja berdasarkan kontrak perkhidmatan. Ia dikuatkuasakan melalui kelayakan majikan untuk mendapat Pas Kerja (iaitu Permit Kerja, S Pass, atau Pas Pekerjaan).

குறைந்த வருமான ஊழியர்களின் சம்பளத்தையும் நலனையும் மேலும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய, 2020 அக்டோபர் மாதம், குறைந்த வருமான ஊழியர்களுக்கான முத்தரப்புப் பணிக்குழு (TWG-LWW) அமைக்கப்பட்டது. படிப்படியான சம்பள உயர்வு முறையை (PWM) மேலும் பல துறைகளுக்கு விரிவுபடுத்துவதும், குறைந்த வருமான ஊழியரின் சம்பளம் தொடர்ந்து இடைநிலை சம்பள வளர்ச்சியைவிட வேகமாக வளர்ச்சி அடைவதை உறுதி செய்வதும் இதில் உள்ளடங்கின.

தொழில்துறை சங்கங்கள், முதலாளிகள், தொழிற்சங்கங்கள், அரசாங்க அமைப்புகள் ஆகியவை பிரதிநிதிக்கப்படும் சில்லறை விற்பனைத் துறைக்கான முத்தரப்புக் குழுமம் (TCR), 15 ஆகஸ்ட் 2022 அன்று வெளியிட்ட பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

சில்லறை விற்பனைத் துறைக்கான படிப்படியான சம்பள உயர்வு முறை (PWM) 1 செப்டம்பர் 2022 அன்று நடப்புக்கு வந்தது. சிங்கப்பூரில் தங்கியிருந்து (சிங்கப்பூரர் / நிரந்தரவாசி) சேவை ஒப்பந்தத்தின்கீழ் முழுநேரமாகவும் பகுதிநேரமாகவும் வேலை செய்யும் சில்லறை விற்பனை ஊழியர்களுக்கு இது பொருந்தும். முதலாளிகள் தகுதிபெறும் வேலை அனுமதி அட்டைகளின் (வேலை அனுமதிச் சீட்டு, சிறப்பு அனுமதி அட்டை, வேலை அனுமதி அட்டை) மூலம் இது செயல்படுத்தப்படும்.

Untuk membaca laporan penuh TCR, sila imbas Kod QR atau layari www.ntuc.org.sg/pwm

முழுமையான TCR அறிக்கையைப் படிக்க, விரைவுத் தகவல் குறியீட்டை ஒளிவருடல் செய்யுங்கள் அல்லது www.ntuc.org.sg/pwm இணையத்தளத்தை நாடுங்கள்

# Tangga Kerjaya PWM
## PWM வாழ்க்கைத்தொழில் ஏணி

Tangga Kerjaya PWM menyediakan laluan perkembangan kerjaya yang jelas untuk membolehkan pekerja maju dalam kerjaya mereka.

ஊழியர்கள் தங்களது வாழ்க்கைத்தொழிலில் முன்னேற்றமடைய, PWM வாழ்க்கைத்தொழில் ஏணி, தெளிவான முன்னேற்றப் பாதையை வகுத்துத் தருகிறது.

**Pengurus Runcit**
சில்லறை விற்பனை மேலாளர்

↑

**Penyelia Runcit**
சில்லறை விற்பனை மேலதிகாரி

↑

**Pembantu Penyelia Runcit**
சில்லறை விற்பனை உதவி மேலதிகாரி


↑

**Juruwang Senior / Pembantu Runcit Senior**
மூத்த காசாளர் / மூத்த சில்லறை விற்பனை உதவியாளர்

↑

**Juruwang / Pembantu Runcit**
காசாளர் / சில்லறை விற்பனை உதவியாளர்







Sila rujuk kepada laporan penuh TCR untuk deskripsi kerja bagi setiap peranan pekerjaan di bawah PWM Runcit.

ஒவ்வொரு வகையான சில்லறை விற்பனை PWM வேலையைப் பற்றிய விளக்கத்திற்கு, முழு TCR அறிக்கையைப் பார்க்கவும்.

# Tangga Kemahiran PWM
## PWM திறன்கள் ஏணி

Tangga Kemahiran PWM memastikan bahawa para pekerja mempunyai kemahiran dan kecekapan yang diperlukan untuk menjalankan tugas mereka dengan cekap dan selamat.

Semua pekerja runcit pemastautin perlu mencapai sekurang-kurangnya satu modul Kelayakan Kemahiran Tengan Kerja (WSQ) berdasarkan peranan pekerjaan mereka. Senarai modul WSQ yang diluluskan boleh didapati dalam Lampiran C dalam Laporan TCR.

*Nota: Selain daripada senarai modul WSQ yang diluluskan, termasuk tahap kemahiran yang disyorkan, modul tahap kemahiran yang lebih tinggi juga akan dianggap memenuhi keperluan latihan.*

**Latihan Dalaman (In-House Training)**
Semua modul WSQ Latihan Dalaman dengan awalan “RET” dalam kod Kemahiran dan Kecekapan Teknikal (Technical Skills and Competencies, TSC) akan diiktiraf sebagai modul latihan yang memenuhi keperluan latihan PWM. Ini hanya terpakai kepada majikan yang telah mencapai status Penyedia Latihan Berdaftar (Registered Training Provider, RTP) dan mempunyai kurikulum kursus tertentu untuk memastikan pekerja mereka dilatih dengan modul yang relevan, membolehkan mereka menggunakan dalam kerja harian mereka.

Majikan diberikan tempoh pengecualian selama enam (6) bulan dari tarikh pengambilan pekerja baru untuk mematuhi keperluan latihan.

**Senarai Instituti Pengajian Tinggi (IHL) dan Institusi Pendidikan Swasta Yang Diiktiraf (PEI)**
Para pekerja runcit yang memiliki sebarang kelayakan IHL atau PEI yang diiktiraf akan dianggap telah memenuhi keperluan latihan PWM bagi semua peranan pekerjaan dalam PWM runcit. Sila rujuk kepada laporan TCR untuk maklumat terperinci.

ஊழியர்கள் தங்களது வேலையைத் திறம்படவும் பாதுகாப்பாகவும் செய்வதற்குத் தேவையான திறன்களைப் பெற்றிருப்பதை PWM திறன்கள் ஏணி உறுதி செய்கிறது.

சிங்கப்பூரில் தங்கியிருக்கும் சில்லறை விற்பனை ஊழியர்கள் அனைவரும் தத்தம் வேலைப் பொறுப்பின் அடிப்படையில் குறைந்தது ஒரு (1) ஊழியர் அணி திறன் தேர்ச்சி (WSQ) பாடத்தொகுதியில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட WSQ பாடத்தொகுதிகளின் பட்டியலை TCR அறிக்கையின் பின்னிணைப்பு C-யில் பார்க்கலாம்.

குறிப்பு: பரிந்துரைக்கப்படும் திறன் நிலையை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட WSQ பாடத்தொகுதிகளின் பட்டியலோடு, உயர் திறன் நிலையிலான இந்தப் பாடத்தொகுதிகளும் பயிற்சி நிபந்தனைகளை நிறைவேற்றுவதாகக் கருதப்படும்.

**பணியிடப் பயிற்சி**

*தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் ஆற்றல்கள் (TSC) குறியீட்டில் "RET" எனும் முன்னெழுத்துகள் கொண்ட பணியிட WSQ பாடத்தொகுதிகள் அனைத்தும் PWM பயிற்சி நிபந்தனைகளை நிறைவேற்றுவதாகக் கருதப்படும். இது, பதிவு செய்யப்பட்ட பயிற்சி வழங்குநர் (RTP) தகுதியை அடைந்திருப்பதோடு, ஊழியர்கள் தங்களது அன்றாட வேலைக்குப் பயன்படுத்தக்கூடிய பாடத்தொகுதிகளில் பயிற்சி பெற்றிருப்பதை உறுதிப்படுத்தும் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முதலாளிகளுக்கு மட்டுமே பொருந்தும்.*

*புதிதாக வேலைக்குச் சேர்க்கப்படுபவர் இந்தப் பயிற்சி நிபந்தனைகளுக்கு உடன்பட, முதலாளிகளுக்கு ஆறு மாதக் கால அவகாசம் தரப்படுகிறது.*

**அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்விக் கழகங்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் பட்டியல்**

*அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்விக் கழகத்தில் அல்லது தனியார் கல்வி நிலையத்தில் தேர்ச்சி பெற்றுள்ள சில்லறை விற்பனை ஊழியர்கள், அனைத்து வகையான சில்லறை விற்பனை PWM வேலைகளுக்கும் PWM பயிற்சி நிபந்தனைகளை நிறைவேற்றிவிட்டதாகக் கருதப்படும். மேல்விவரங்கள் TCR அறிக்கையில் கிடைக்கும்.*

# Tangga Gaji PWM
## PWM சம்பள ஏணி

Tangga Gaji PWM menetapkan gaji garis dasar dan kenaikan tahunan yang mampan sejajar dengan peranan pekerjaan masing-masing.

Selaras dengan saranan Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) supaya gaji progresif yang perlu dinyatakan dalam istilah kasar, TCR, menyarankan satu set gaji garis dasar kasar (tidak termasuk kerja lebih masa atau `Overtime') dan jadual Keperluan Gaji Kasar (Gross Wage Requirements) jika terdapat bayaran lebih masa.

TCR juga menyarankan kenaikan gaji tahunan tetap untuk semua peringkat pekerjaan, dengan pertumbuhan gaji yang lebih cepat untuk peringkat pekerjaan yang lebih rendah. Ini sejajar dengan panduan Kumpulan Kerja Tiga Pihak bagi Pekerja Bergaji Rendah (TWG-LWW) agar pertumbuhan gaji bagi pekerja yang bergaji rendah melebihi kadar pertumbuhan gaji pekerja median.

PWM சம்பள ஏணி, அந்தந்த வேலைகளின் பொறுப்புகளுக்கு ஏற்ப அடிப்படைச் சம்பளங்களையும் நீடித்து நிலைக்கவல்ல வருடாந்தர சம்பள உயர்வுகளையும் நிர்ணயிக்கிறது.

படிப்படியான சம்பள உயர்வுகளை மொத்தமாகக் காட்டும்படி TWG-LWW செய்த பரிந்துரையின்படி, அடிப்படை மொத்த சம்பளங்களையும் (மிகைநேர வேலை தவிர்த்து), மிகைநேரச் சம்பளம் இருந்தால் அதற்கான மொத்த சம்பள நிபந்தனைகளையும் TCR பரிந்துரைத்தது.

ஆண்டுதோறும் நிலையான சம்பள உயர்வு வழங்குமாறும் TCR பரிந்துரைக்கிறது. இதில் கீழ்மட்ட வேலைகளில் இருப்போருக்கு வேகமான சம்பள வளர்ச்சி பரிந்துரைக்கப்படுகிறது. குறைந்த வருமான ஊழியர்களின் சம்பளம், இடைநிலை ஊழியர்களின் சம்பள வளர்ச்சியைவிட வேகமாக வளர்ச்சி அடைய TWG-LWW குழுமம் வெளியிட்ட வழிகாட்டியின்படி இந்தப் பரிந்துரைகள் செய்யப்பட்டன.







**Keperluan Gaji Kasar (Gross Wage Requirements) PWM untuk Kerja Lebih Masa**
Majikan dikehendaki mematuhi keperluan gaji kasar tambahan apabila pekerja bekerja lebih masa (OT). Jadual gaji kasar akan ditetapkan untuk menentukan gaji kasar yang perlu dibayar bagi setiap jam tambahan bekerja melebihi 44 jam seminggu. Sila rujuk kepada Lampiran D dalam Laporan TCR untuk jadual gaji kasar yang terperinci.

Ini hanya berkenaan untuk pekerja yang dilindungi di bawah Bahagian 4 Akta Pekerjaan.

**மிகைநேர வேலைக்கான PWM மொத்த சம்பள நிபந்தனைகள்**
*ஊழியர்கள் மிகைநேர வேலை செய்யும்போது, கூடுதலான மொத்த சம்பள நிபந்தனைகளுக்கு முதலாளிகள் உடன்படவேண்டும். ஒரு வாரத்தில் 44 மணிநேரத்திற்குமேல் கூடுதலாக வேலை செய்யும் ஒவ்வொரு மணிநேரத்திற்கும் எவ்வளவு மொத்த சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்க, மொத்த சம்பள அட்டவணை நடைமுறைப்படுத்தப்படும். மொத்த சம்பள அட்டவணையின் விரிவான விவரங்களுக்கு, TCR அறிக்கையின் பின்னிணைப்பு D-யைப் பாருங்கள்.*

*வேலை நியமனச் சட்டம் பகுதி 4-ன்கீழ் இடம்பெறும் ஊழியர்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.*

**Gaji Garis Dasar PWM mulai 1 September setiap tahun**
**ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் முதல் தேதி நடப்புக்கு வரும் PWM அடிப்படை மொத்த சம்பளங்கள்**

## PWM Peranan Pekerjaan PWM வேலை

| PWM Peranan Pekerjaan | 2025 | 2026 | 2027 |
|---|---|---|---|
| Pengurus Runcit<br>சில்லறை விற்பனை மேலாளர் | Gaji dibiarkan kepada kuasa pasaran<br>சந்தை நிலவரத்திடம் விட்டுவைக்கப்படும் சம்பளங்கள் | | |
| Penyelia Runcit<br>சில்லறை விற்பனை மேலதிகாரி | Gaji dibiarkan kepada kuasa pasaran<br>சந்தை நிலவரத்திடம் விட்டுவைக்கப்படும் சம்பளங்கள் | | |
| Pembantu Penyelia Runcit*<br>சில்லறை விற்பனை உதவி மேலதிகாரி* | $2,790<br>$14.63 | $2,950<br>$15.47 | $3,100^<br>$16.26 |
| Juruwang Senior / Pembantu Runcit Senior*<br>மூத்த காசாளர் / மூத்த சில்லறை விற்பனை உதவியாளர்* | $2,535<br>$13.30 | $2,680<br>$14.06 | $2,820^<br>$14.79 |
| Juruwang / Pembantu Runcit*<br>காசாளர் / சில்லறை விற்பனை உதவியாளர்* | $2,305<br>$12.09 | $2,435<br>$12.77 | $2,565^<br>$13.45 |

Bulanan மாதத்திற்கு (upper figure) | Setiap Jam மணிநேரத்திற்கு (lower figure)

* Majikan mungkin akan menggunakan nama pekerjaan yang berbeza, seperti pembantu kedai atau penolong runcit dan lain-lain.

^ Gaji PWM mulai 1 September 2027 mungkin akan disemak semula.

** நிறுவனங்கள் கடை உதவியாளர், சில்லறை விற்பனை அசோசியேட் போன்ற பல்வேறு வேலைப் பெயர்களைப் பயன்படுத்தலாம்.*
*^ 1 செப்டம்பர் 2027 தொடங்கும் PWM சம்பளம் மறுஆய்வு செய்யப்படலாம்*

# Soalan-soalan Yang Sering Ditanya

1. **Apakah peranan pekerjaan akan saya diklasifikasikan jika saya melakukan pelbagai fungsi pekerjaan (contohnya, pembantu runcit dan pemandu penghantaran)?**

   Anda akan diklasifikasikan di bawah peranan pekerjaan di mana anda menghabiskan majoriti masa bekerja anda (iaitu, lebih daripada 50%) dan dibayar gaji PWM yang berkenaan

   Sekiranya terdapat sebarang percanggahan, sila hubungi MOM di 6320 7722 (Isnin hingga Jumaat, 8.30 pagi hingga 5.30 petang) atau kesatuan kerja, jika anda ahli kesatuan, untuk bantuan lanjut.

2. **Bagaimana saya tahu jika majikan saya telah mengistiharkan tahap kerja dan gaji saya dengan tepat?**

   Semua pekerja pemastautin boleh log masuk masuk ke Portal Gaji Progresif (Progressive Wage Portal, go.gov.sg/pw-portal) untuk menyemak sama ada majikan mereka membayar gaji yang tepat, berdasarkan PWM dan Gaji Kelayakan Tempatan (Local Qualifying Salary, LQS). Jika maklumat yang ditunjukkan tidak tepat, pekerja dinasihatkan untuk menyemak dengan majikan mereka dengan segera. Untuk bantuan lanjut, sila hubungi MOM di 6320 7722 atau kesatuan kerja, jika anda ahli kesatuan, (Isnin hingga Jumaat, 8.30 pagi hingga 5.30 petang).

3. **Adakah saya akan mendapat kenaikan gaji secara automatik setiap bulan September?**

   Kenaikan gaji asas PWM berkuat kuasa setiap tahun pada 1 September dari tahun 2025 hingga 2027. Jika gaji anda sudah lebih tinggi daripada Gaji Kasar Asas PWM yang ditetapkan, adalah budi bicara majikan anda untuk memberikan kenaikan gaji kepada anda.

4. **Adakah bayaran lebih masa dianggap sebagai sebahagian daripada Gaji Kasar Asas PWM?**

   Gaji Kasar Asas PWM tidak termasuk bayaran lebih masa. Bagi pekerja runcit yang dilindungi oleh PWM dan di bawah Bahagian 4 Akta Pekerjaan, untuk setiap jam kerja lebih masa (OT), majikan dikehendaki mematuhi set keperluan gaji kasar. Sila rujuk kepada Lampiran D dalam Laporan TCR untuk ambang jadual gaji kasar.

5. **Bagi pekerja runcit separuh masa yang sedang bersekolah, adakah mereka akan menerima gaji PWM runcit dan dikehendaki memenuhi keperluan latihan?**

   Ya. Majikan perlu membayar pekerja pelajar separuh masa dengan gaji asas PWM yang berkenaan.

   Secara lalai, semua pekerja runcit yang dilindungi oleh PWM dikehendaki memenuhi minimum satu modul WSQ keperluan latihan. Majikan mempunyai tempoh pengecualian selama 6 bulan untuk mematuhi keperluan latihan bagi pengambilan baru termasuk pekerja pelajar.

6. **Bagi pekerja runcit di bawah Program Diploma Kerja Sambil Belajar (WSDip), adakah mereka akan menerima gaji asas PWM Runcit dan dikehendaki memenuhi keperluan latihan?**

   Ya, majikan perlu membayar pekerja-pekerja runcit di bawah Program Diploma Kerja Sambil Belajar (WSDip) dengan gaji asas PWM yang berkenaan. Namun, majikan tidak diwajibkan menghantar pekerja untuk latihan kerana program WSDip sudah merangkumi modul latihan yang diperlukan.



# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**1. நான் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச் செய்தால் (எ.கா. சில்லறை விற்பனை உதவியாளர் மற்றும் விநியோக ஓட்டுநர்) எந்த வேலையின்கீழ் நான் பகுக்கப்படுவேன்?**

*உங்கள் வேலை நேரத்தில் பெரும்பகுதியை (அதாவது, 50 விழுக்காட்டுக்குமேல்) செலவிடும் வேலையின்கீழ் நீங்கள் பகுக்கப்படுவீர்கள். அதற்குரிய PWM சம்பளம் உங்களுக்குக் கொடுக்கப்படும்.*

*ஏதாவது முரண்பாடுகள் இருந்தால், 6320 7722 என்ற எண்ணில் மனிதவள அமைச்சுடன் தொடர்பு கொள்ளுங்கள் (திங்கள் முதல் வெள்ளி, காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை) அல்லது நீங்கள் தொழிற்சங்க உறுப்பினராக இருந்தால், உங்களது தொழிற்சங்கத்திடம் மேற்கொண்டு உதவி நாடுங்கள்.*

**2. என் முதலாளி எனது வேலை நிலையையும் சம்பளத்தையும் சரியாகத் தெரிவித்திருக்கிறாரா என்பதை நான் எப்படித் தெரிந்துகொள்வது?**

*சிங்கப்பூரில் தங்கியிருந்து வேலை செய்யும் ஊழியர்கள் அனைவரும், படிப்படியான சம்பள உயர்வு முறை வலைத்தளத்தில் (go.gov.sg/pw-portal) உட்பதிவு செய்து, படிப்படியான சம்பள உயர்வு முறை மற்றும் தகுதிபெறும் உள்ளூர்ச் சம்பள நிபந்தனைகளின் அடிப்படையில் முதலாளிகள் தங்களுக்குச் சரியான சம்பளம் தருகிறார்களா என்பதைச் சரிபார்க்கலாம். சம்பள விவரம் சரியாக இல்லாவிட்டால், ஊழியர்கள் உடனடியாகத் தங்களது முதலாளிகளிடம் அதுபற்றி கேட்குமாறு ஆலோசனை கூறப்படுகிறது. மேற்கொண்டு உதவி பெற, 6320 7722 என்ற எண்ணில் மனிதவள அமைச்சுடன் தொடர்பு கொள்ளுங்கள் (திங்கள் முதல் வெள்ளி, காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை).*

**3. ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் தானாகவே எனக்குச் சம்பள உயர்வு கிடைக்குமா?**

*படிப்படியான சம்பள உயர்வு முறையின் அடிப்படைச் சம்பள உயர்வுகள், 2025 முதல் 2027 வரை ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் முதல் தேதி நடப்புக்கு வரும். உங்களது சம்பளம், உங்களுக்கான PWM அடிப்படை மொத்த சம்பளத்தைவிட ஏற்கனவே அதிகமாக இருந்தால், உங்களுக்குச் சம்பள உயர்வு தருவது உங்கள் முதலாளியின் விருப்பத்திற்கு உட்பட்டது.*

**4. மிகைநேர வேலைக்கான சம்பளம், PWM அடிப்படை மொத்த சம்பளத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறதா?**

*PWM அடிப்படை மொத்த சம்பளத்தில் மிகைநேர வேலைக்கான சம்பளம் உள்ளடங்காது. படிப்படியான சம்பள உயர்வு முறையின்கீழும், வேலை நியமனச் சட்டம் பகுதி 4-ன்கீழும் இடம்பெறும் சில்லறை விற்பனைத் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு, ஒவ்வொரு மணிநேர மிகைநேர வேலைக்கும், முதலாளிகள் மொத்த சம்பள நிபந்தனைகளுக்கு உடன்படவேண்டும். மொத்த சம்பள அட்டவணையை TCR அறிக்கையின் பின்னிணைப்பு D-ல் காணலாம்.*

**5. தற்போது படித்துக் கொண்டிருக்கும் பகுதிநேரச் சில்லறை விற்பனை ஊழியர்களுக்கு, சில்லறை விற்பனைத் துறைக்கான PWM சம்பளம் கிடைக்குமா? அவர்கள் பயிற்சி நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமா?**

*ஆமாம். பகுதிநேர மாணவ ஊழியர்களுக்குப் பொருந்தத்தக்க PWM அடிப்படைச் சம்பளத்தை முதலாளிகள் கொடுக்கவேண்டும். சில்லறை விற்பனைத் துறைக்கான PWM திட்டத்தின்கீழ் இடம்பெறும் ஊழியர்கள் அனைவரும், குறைந்தது 1 WSQ பாடத்தொகுதியில் பயிற்சி பெறுவது அவசியம். மாணவ ஊழியர்கள் உட்பட, புதிதாக வேலைக்குச் சேர்க்கும் ஊழியர்கள் அனைவருக்கும் இந்தப் பயிற்சியை அளிக்க முதலாளிகளுக்கு 6 மாத கால அவகாசம் தரப்படும்.*

**6. வேலை-கல்வி பட்டயத் திட்டத்தின்கீழ் (WSDip) வேலை செய்யும் சில்லறை விற்பனை ஊழியர்கள், சில்லறை விற்பனைத் துறைக்கான அடிப்படை PWM சம்பளங்களைப் பெறுவார்களா? அவர்கள் பயிற்சி நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமா?**

*ஆமாம், வேலை-கல்வி பட்டயத் திட்டத்தின்கீழ் வேலை செய்யும் சில்லறை விற்பனை ஊழியர்களுக்குப் பொருந்தத்தக்க PWM சம்பளங்களை முதலாளிகள் கொடுக்கவேண்டும். ஆனால், தேவையான பயிற்சிப் பாடத்தொகுதிகள் வேலை-கல்வி பட்டயத் திட்டத்தில் இடம்பெற்றிருக்கும் என்பதால், முதலாளிகள் அவர்களைப் பயிற்சிக்கு அனுப்புவது கட்டாயமில்லை.*

